G.C.E. (A|L) 1987
Physics: VARNAM
நடைபெறுகின்றது.
திங்கள், வெள்ளி;
3-4 ELECTRICITY
திங்கள், வெள்ளி;
4-5 MECHANICS
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/-

DAY CLASS
A/L PHYSICS
MECHANICS
ஆரம்பம் - 1-12-86
திங்கள் காலை 7-30 மணி
MON-FRI - 7-30A.M.
by
SATHIYASEELAN
NEW MASTER INSTITUTE
B.M.C. Lane, JAFFNA

கடர்:- 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஸ்ரீ கார்த்திகை மீ 29 உ. திங்கட்கிழமை ஹிஜ்ரி 1407 ரபியு ஆகிர் பிறை 12 (15-12-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 16

## வல்வையில் தாக்குதல்

வல்வெட்டித்துறை, டிச. 15

வல்வை இராணுவ முகாமிலிருந்து சனிக்கிழமை நள்ளிரவு முதல் நேற்றுப் பிற்பகல் வரை அடிக்கடி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டன.

இதனால் பல வீடுகளின் கூரைகள் சேதமடைந்திருக்கின்றன. சில ஓலைவீடுகள் தீப்பிடித்து எரிந்தன. (உ-160)

முற்றுகை, மோதல் சனி இரவோடு தணிந்தன

# ஈ.பி.ஆர்.எல்.எவ். முகாம்கள்

# விடுதலைப் புலிகள் வசம்!

## நூற்றுக்கணக்கானோர் சரண்; பலர் கைது; ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், டிச. 15

தமிழ்ப் பகுதிகள் எங்கும், தமிழீழ விடுதலைப் புலிகள், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்-எல்.எவ்.) முகாம்கள் மீது நடத்திய முற்றுகையும், மோதல்களும் சனிக்கிழமை இரவோடு தணிந்தன நேற்றுக் கிழக்கின் சில பகுதிகள் தவிர ஏனைய இடங்களில் அமைதி நிலவியது,

இதேவேளை சனிக்கிழமைச் சம்பவங்களைத் தொடர்ந்து ஈ. பி. ஆர். எல். எவ்வைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் புலிகளிடம் சரண் அடைந்தனர் என்றும் -

ஈ. பி. ஆர். எல். எவ்வின் உள்மட்டத் தலைவர்கள் உட்பட மற்றும் பெரும் எண்ணிக்கையினர் கைது செய்யப்பட்டனர் என்றும்- பல முகாம்களில் இருந்து பெருந்தொகையான ஆயுதங்களைப் புலிகள் மீட்டதாகவும் அறிய வந்தது.

சனிக்கிழமைச் சம்பவங்களின்போது வன்னி, கிழக்கு மாவட்டங்களில் சுமார் 15 பேர் உயிரிழந்திருக்கலாம் என உத்தியோகப்பற்றற்ற தகவல்கள் தெரிவித்தன. யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒரு சிலர் மட்டும் காயமடைந்தனர்.

இதேவேளை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் ஈ. பி. ஆர். எல் எவ். இயக்கம் முற்றாக செயலிழந்து விட்டதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் பேச்சாளர் ஒருவர் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

ஈ. பி. ஆர். எல். எவ் இயக்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையிலான மோதல்கள் கடந்த சனிக்கிழமை இரவு மன்னார், அடம்பன் பகுதியிலேயே மூண்டதாக முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்திருந்தன.

ஈ. பி. ஆர். எல். எவ். இயக்க உறுப்பினர்களின் துணையோடு, ஏற்கனவே தடைசெய்யப்பட்ட இயக்கம் ஒன்றின் உறுப்பினர்கள் பெரும் எண்ணிக்கையில் மன்னார் கடலோரத்தில் வந்திறங்க முயன்றதா

(4ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி முகாமிலிருந்து ஷெல் தாக்குதல்

### இளைஞர் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், டிச. 15

பலாலி இராணுவ முகாமில் இருந்து கடந்த சனிக்கிழமை மாலை சுமார் 6 மணியளவில் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த ஒருவர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நாகலிங்கம் பிரேம் (17 வயது) என்ற இளைஞரே ஷெல் தாக்குதலுக்கு இலக்கானவராவர்.

ஷெல் தாக்குதல் காரணமாக இப்பகுதியில் உள்ள ஆலயம் ஒன்று சேதமடைந்ததாகவும் தெரியவருகிறது. (உ-10)

## புலிகள் முகாம்களின் முன் பெற்றோர் திரண்டனர்

யாழ்ப்பாணம், டிச. 15

புலிகளின் பாதுகாவலில் இருக்கும் ஈ.பி ஆர். எல்.எவ். உறுப்பினர்களது பெற்றோர்கள் புலிகளின் முகாம்கள் முன்னே நேற்று கண்ணீரும் கம்பலையுமாக அழுதபடி நின்றனர்.

கடந்த இரண்டு நாட்களாக தமிழ்ப் பிரதேசங்களில் நடைபெற்ற புலிகள் ஈ.பி.ஆர்.எல்.எவ். மோதல்களின் போது நூற்றுக்கணக்கான ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர்கள் புலிகளினால் கைது செய்யப்பட்டனர்; அல்லது புலிகளிடம் சரணடைந்தனர்.

இதனையடுத்தே தமது பிள்ளைகளை விடுதலை செய்யுமாறு நூற்றுக்கணக்கான பெற்றோர்கள் புலிகளின் முகாம்கள் முன்னே அழுதபடி கண்ணீரும் கம்பலையுமாக நின்றனர்.

எனினும் புலிகள் உறுப்பினர்கள் அவர்களுக்கு ஆறுதல் கூறி கைது செய்யப்பட்ட அனைவரும் பூரண விசாரணையின்பின் விடுதலை செய்யப்படுவர் என உறுதி அளித்ததன் பின்னர் அவர்கள் அங்கிருந்து சென்றனர். (உ-10)

## இயக்கங்கள் ஒன்றுபடக் கோரி வழிமறிப்புப் போர்

யாழ்ப்பாணம், டிச 15

வடக்கின் பல பகுதிகளிலும் நேற்று வழிமறிப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

மல்லாகத்தில் நேற்று மாலை வழிமறிப்புப் போர் நடைபெற்றது.

நீர்வேலிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் நடைபெற்ற வழி மறிப்புப்போர் சிறிது நேரத்தில் கைவிடப்பட்டது.

விடுதலை இயக்கங்கள் ஒன்றுபட வேண்டுமென கோரியே இந்த வழி மறிப்புப் போர் நடைபெற்றது. (உ-10)

## கொம்மாதுறை: 75 பேர் கைது; ஒருவர் பலி

மட்டக்களப்பு, டிச. 15

கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு, கொம்மாதுறையில் நடந்த தேடுதலின் போது இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு தமிழ் இளைஞன் உயிரிழந்தான்.

இளைஞனின் சடலம் ஆயுதப்படை முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

சுமார் 75 பேர் விசாரணைக்காக கல்லடி முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். (உ-எ-21)

### முச்சந்தி முனி



இப்ப குடுத்தது எத்தனையாவது யோசனையும் வரைபடமும் என்டதை நீண்ட நேரம் எண்ணித்தான் சொல்ல வேணும்...!

## இணை அமைச்சர் குழு நாளை கொழும்பு வரும்

### இன்று சென்னையில் பேச்சு

கொழும்பு, டிச. 15

இந்திய அரசின் இணை அமைச்சர்கள் குழு முன்னர் அறிவிக்கப்பட்டபடி நாளை (செவ்வாய்) இரவு கொழும்பு வந்தடையும்.

இன்று (திங்கள்) இணை அமைச்சர் குழு சென்னை சென்று தமிழ்ப் போராளிக் குழுக்களுடன் பேச்சுக்களை நடத்தும். இப்பேச்சுக்களில் முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன், இந்திரா காங்கிரஸ் பொதுச் செயலாளர் கருப்பையா மூப்பனார், அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

பின்னர் இணை அமைச்

(4-ம் பக்கம் பார்க்க)

## கல்முனையில் ஊரடங்கு நீக்கம்

அம்பாறை, டிச. 15

கல்முனைப் பொலிஸ் பகுதியில் அமுல் நடத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்றுடன் நீக்கப்பட்டது.

வேறு அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறவில்லை. (உ-எ-14)

திருச்சி கார் விபத்தில்

## உமா, வாசுதேவா இருவரும் காயம்

திருச்சி, டிச. 14

திருச்சி அருகே ஒரு தமிழ்ப் போராளியைப் பலி கொண்ட கார் விபத்தில் காயம் அடைந்தவர்களில் ஒருவர் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தலைவர் உமா மகேஸ்வரன் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

காயமடைந்த இரண்டாவது நபர் கழகத்தின் முக்கிய பிரமுகரான இரா. வாசுதேவா.

கடுமையான காயங்களுக்காளான இரா. வாசுதேவா, திருச்சி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

சிறிது காயமடைந்த திரு. உமா மகேஸ்வரன் சிகிச்சைக்குப் பின்னர் புதுக்கோட்டை சென்றார்.

உயிரிழந்த போராளியும் இக்கழகத்தைச் சேர்ந்தவரே. அவரின் பெயர் ரொபர்ட், (உ-ஐ-எ)

புலிகள் விடுத்த அறிவிப்பு:

## ஒளித்திருப்போர் உடனடியாக சரணடைய வேண்டுகோள்

### உயிர்ப் பாதுகாப்புக்கு முழு உத்தரவாதம்

யாழ்ப்பாணம், டிச. 15

ஒளித்திருக்கும் ஈ. பி. ஆர். எல். எவ். உறுப்பினர்களை உடனடியாகச் சரணடையும்படி புலிகள் இயக்கப் போராளிகள் ஒலிபெருக்கி மூலம் அறிவித்துவருகிறார்கள்.

தமிழ்ப் பிரதேசத்தில் பல இடங்களிலும் வீதிக்குவீதி வாகனங்களில் வந்து புலிகள் ஒலிபெருக்கிமூலம் இவ்வாறு அறிவித்தனர்.

சரணடையும் ஈ.பி ஆர். எல் எவ். போராளிகளுக்கு முழுஉயிர்ப் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்படும் எனவும் புலிகள் அறிவித்துவருகிறார்கள்.

இதேசமயம் தமிழ் மக்களுக்கு புலிகள் விடுத்த வேண்டுகோளில் —

ரெலோவின் பாதையிலும் போக்கிலும் செயற்பட்ட ஈ. பி. ஆர். எல். எப். இயக்கத்தைப் பரிபூரணமாகத் தடைசெய்ய — விடுதலையை வென்றெடுக்க — முழு ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் கேட்டுள்ளனர்.

தமிழ் மக்களிடம் தஞ்சம் புகுந்துள்ள ஈ. பி.

(4ஆம் பக்கம் பார்க்க)

## மட்டுநகரில் 250 தமிழர்கள் கைது!

மட்டக்களப்பு, டிச. 15

மட்டக்களப்பில் ஆயுதப்படையினர் நடத்திய 5 மணி நேரத் தேடுதல், சுற்றிவளைப்பின் போது 250 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு மாநகர எல்லைக்குள் இருக்கும் மட்டிக்களி பகுதியில் ஆயுதப்படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் 80 வயது மீனவர் சினித்தம்பி தம்பிராசா உயிரிழந்தார்.

நேற்றுக்காலை இச்சம்பவம் நடைபெற்றது.

ஆயுதப்படையினர் காலை 5 மணி முதல் 10 மணிவரை தேடுதல் நடத்தினர்.

அப்போது வாவியில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மீள்பரிசீலனை செய்க!

### புலிகளிடம் ஈரோஸ் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், டிச. 15

தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட முடிவுகளை அவர்கள் மீள் பரிசிலனை செய்வது அவசியமாகும்.

இப்படி ஈரோஸ் அமைப்பு கோரிக்கை விடுத்திருக்கிறது.

இது தொடர்பாக ஈரோஸ் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வாழ்வதற்கான சூழ்நிலையே அற்றுக்கொண்டிருக்கும் ஸ்ரீ லங்கா அடக்குமுறைக்கெதிரான போராட்டத்தில் ஒன்றிணைந்து நிற்கவேண்டிய இயக்கங்கள் தங்களுக்குள் மோதிக்கொள்வது மக்கள் நலனையும் போராட்ட முன்னெடுப்பையும் புறக்கணிக்கும் தன்மையையும் வெளிப்படுத்தியுள்ளது,

ஈ. பி. ஆர். எல். எவ். வின்மீது மேற்கொள்ளப்பட்டுள்ள பலாத்காரமுயற்சியானது அதன் இந்திய நிலைப்பாட்டை முறியடிப்பதற்கானதே என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈழப்போராட்டத்தில் இந்தியாவின் தலையீடானது இயக்கங்களின் ஐக்கியத்துக்கூடாகவே மட்டுப்படுத்தப்பட்டு வந்தது; இந்நெறிமுறைக்கு முரணாக தமிழீழ விடுதலைப்புலிகள் மேற்கொண்டு வந்த அவசர நடவடிக்கையானது அனைத்து விடுதலை இயக்கங்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கல்முனைச் சேதம் ரூ 40. லட்சம் என மதிப்பீடு

### நேற்று பூரண அமைதி

அம்பாறை, டிச. 15

கடந்தசனிக்கிழமைகல்முனையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களினால் சுமார் 40 லட்சம் ரூபாவுக்குமேல் சொத்துக்கள் சேதமடைந்தன என்று அறிவிக்கப்படுகிறது.

சீருடையினர் நடத்திய அட்டகாசத்தின்போது கடைகள், வீடுகள், கார்கள், மில்கள் எரிந்து நாசமாகின என்பது தெரிந்ததே.

விமானமூலம் கொழும்பில் இருந்து கல்முனை வந்த கல்முனை எம். பி. ஜனாப் ஏ. ஆர். மன்சூர், பாதிக்கப்பட்டவர்களையும், பாதிக்கப்பட்ட இடங்களையும் பார்வையிட்டார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கத்திடம் இருந்து நட்டஈடு பெற்றுக்கொடுக்கத் தான் நடவடிக்கை எடுக்கப்போவதாக ஜனாப் மன்சூர் உறுதியளித்தார்.

கல்முனையில் நேற்று பூரணஅமைதி நிலவியது. அசம்பாவிதம் எதுவும் இடம்பெறவில்லை. (உ-எ-14)

கிழக்கு மாகாணத்தில் அமையவிருக்கும்

## தமிழ் மாகாணசபையின் வரைபடம் இந்தியாவிடம்

### பேர்னூட் சமர்ப்பித்தார்

புதுடில்லி, டிச. 14

கிழக்கு மாகாணத்தில் அமையவிருக்கும் புதிய தமிழ் மாகாணத்தின் வரைபடத்தை இலங்கைத் தூதர் பேர்னூட் திலகரத்தின இந்திய அரசு அதிகாரிகளிடம் கையளித்தார்.

அந்த வரைபடம் இந்திய அரசு அதிகாரிகளினால் நுணுக்கமாகப் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது.

இப்படி புதுடில்லிச் செய்திகள் தெரிவித்தன.

இணைப்பை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் வடக்கு மாகாணம். கிழக்கில் அமைக்கப்படும் புதிய தமிழ் மாகாணம் ஆகிய இரண்டையும் தமிழர் தாயகமாக இலங்கை அரசு கருத வேண்டும் என்ற புதிய சிந்தனை ஒன்று இந்திய அரசு வட்டாரங்களில் நிலவுவதாகவும் புதுடில்லிச் செய்திகள் கூறின.

இரண்டு தமிழ் மாகாணங்கள் திட்டத்தையே இந்திய அமைச்சர் குழு, கொழும்பு விஜயத்தின்

(4-ம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

15—12—1986

திங்கட்கிழமை

சுபநேரம்:

12.21 முதல் 1.51 வரை

ராகுகாலம்:

7.51 முதல் 9.21 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

திருவெம்பாவை எட்டாம்நாள்

பூரணை விரதம்

உ
சிவமயம்
ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ.
இடம் மாற்ற அறிவித்தல்
அன்புடையீர்,
பெரியகடை 13, 14-இலக்கத்தில் இதுவரை காலமும் இயங்கிய எமது ஸ்தாபனம் இன்றைய சூழ்நிலை காரணமாக கே.கே.எஸ் வீதியில் உள்ள
இலக்கம் 79, M.O ஸன்ஸ் கட்டிடத்தில் (15-12-86) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் ஆரம்பிக்க உத்தேசித்துள்ளோம்.
வாடிக்கையாளர்களாகிய நீங்கள் தொடர்ந்தும் எமக்கு ஆசியையும் ஆதரவையும் வழங்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இங்ஙனம்
ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ,
79, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

GLORIA TRAVELS
கனடா
நோர்வே
பிரான்ஸ்
ஜேர்மனி
ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன்
நோர்வே, கனடா செல்வதற்கு உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.
மற்றும்
பாஸ்போட், பொண்ட் (BOND) விசா, ரிக்கற்
ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.
GLORIA TRAVELS
சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டரங்கு

# முல்லைத்தீவு உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி முடிவு

முல்லைத்தீவு, டிச, 15 முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுச் சங்கத்தினால் நடத்தப்பட்ட கழகங்களுக்கும், திணைக்களங்களுக்கும் இடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி இறுதி ஆட்டங்கள் முல்லைத்தீவு மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

வெற்றியீட்டியோர் விவரங்கள்:-

1. திணைக்களங்களுக்கிடையிலான போட்டிகள்: சம்பியன் கோஷ்டி–முல்லைத்தீவு கச்சேரி– ஏ கோஷ்டி இரண்டாவது இடம் – முல்லைத்தீவு கச்சேரி – பி கோஷ்டி.

2. கழகங்களுக்கிடையிலான சுற்றுப் போட்டி சம்பியன்கோஷ்டி – சரீர உதவி விளையாட்டுக் கழகம், முல்லைத்தீவு. இரண்டாம் இடம்– இளைஞர் விளையாட்டுக்கழகம் முல்லைத்தீவு.

சிறந்த வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டோர்:-

திணைக்களங்கள்:-ஏ. கே. தனபாலசிங்கம், கச்சேரி, முல்லைத்தீவு. பி கே குமாரசாமி முல்லைத்தீவு, கச்சேரி.

2. கழகங்கள்:- ஏ. எஸ். மரியராசா, சரீர உதவி விளையாட்டுக்கழகம். பி.ஏ. யோசேப் யூட் இளைஞர் விளையாட்டுக் கழகம் முல்லைத்தீவு.

இப்போட்டிக்கு முல்லைத்தீவு அரசஅதிபர் திரு. க.பொன்னம்பலம் பிரதம விருந்தினராகக் கலந்து வெற்றியீட்டிய கழகங்களுக்கு நற்சாட்சிப் பத்திரங்கள், வெற்றிக்கிண்ணங்கள் ஆகியவற்றை வழங்கினார். இப்போட்டிக்குரியஒழுங்குகளை முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு த. நடராசா செய்து முடித்தார் போட்டிக்கு யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் தலைவர் திரு.இ கே, குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். (இ)

# பனந்தும்புக்கு கொழும்பில் நல்ல சந்தை வாய்ப்பு

யாழ்ப்பாணம் டிச. 15 பனந்தும்புக்கு கொழும்பில் நல்ல சந்தை வாய்ப்பு இருப்பதாகப் பனம்பொருள் அபிவிருத்திச் சபைத்தலைவர் திரு. கே. நடராசா அறிவித்திருக்கிறார்.

கொழும்பு 'கற்பகம்' நிலையத்தில் யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகும் பனந்தும்புக்கு நல்ல கிராக்கி உண்டு.

சிறுகைத்தொழிலாளர்கள் யாழ் பனந் தும்பையே விரும்பி வாங்குகின்றனர்.

ஆகவே யாழ் மக்கள் ஏற்றுமதிக்கு உகந்த முறையில் பதனிட்டு தும்பு உற்பத்தி செய்தால் நல்ல வருமானம் பெறலாம்.

அப்படி உற்பத்தி செய்யப்படும் பனந்தும்பை நியாய விலையில் வாங்கி உற்பத்தியாளருக்கு உதவ பனம் பொருள் அபிவிருத்திச் சபை தயாராக இருக்கிறது.

இப்படி சபைத்தலைவர் திரு. கே நடராசா உதயனுக்குத் தெரிவித்தார். (இ–எ)

## கிழக்குத் தமிழர் வேதனையை தென் இலங்கை மக்களுக்குத் தெரிவியுங்கள்

### விஜேக்கு வேல் முருகு கடிதம்

மட்டக்களப்பு, டிச. 15 கிழக்கு மாகாணத்துக்கும் விஜயம் செய்து தமிழர்கள் படும் வேதனைகளைப் பார்த்து தென் இலங்கை மக்களுக்குத் தெரிவியுங்கள்.

சிறிலங்கா மக்கள் கட்சிச் செயலாளர் விஜயகுமாரணதுங்காவுக்கு இப்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வேண்டுகோள் விடுத்தவர் அம்பாறை மாவட்ட அபிவிருத்திச் சபையின் முன்னாள் உறுப்பினரும் கூட்டணிப் பிரமுகருமான திரு. கா. வேல் முருகு.

இது சம்பந்தமாக விஜயகுமாரணதுங்காவுக்கு வேல்முருகு கடிதம் எழுதி உள்ளார். (இ-எ-21)

## வெள்ளிவிழா

யாழ்ப்பாணம்,டிச 15 யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் வெள்ளிவிழா நிகழ்ச்சிகள் இன்று பிற்பகல் 3மணிக்கு யாழ்ப்பாணம் ஹோட்டல் ஞானம்ஸில் நடைபெறுகிறது

சங்கத்தின் வெள்ளி விழா மலரும் இன்றைய நிகழ்ச்சியின் போது வெளியிடப்படவிருக்கிறது. (உ)

## திருவெம்பாவை

யாழ்ப்பாணம், டிச.15 திருநெல்வேலி ஆடிய பாதம் வீதியில் அமைந்துள்ள ராமகிருஷ்ணாலயத்தில் தினமும் மாலை 5.15 மணியளவில் திருவெம்பாவை ஓதல், விளக்கவுரை, திருவாசகம் சுவாமியென்று அழைக்கப்படும் சபாரத்தினம் சுவாமிகளினால் நிகழ்த்தப்படுகிறது.

புதன்கிழமை அதிகாலை நடேசர் அபிஷேகம் நடைபெறும். (இ–எ)

## தாக்குதலில் இருவர் காயம்

வல்வெட்டித்துறைடிச15 வல்வெட்டித்துறை இராணுவ முகாமில் இருந்து கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்ட ஆட்லறித் தாக்குதலில் போராளிகள் இருவர் காயம் அடைந்தனர்.

ஆடு ஒன்று வயிறு பிளந்த நிலையில் இறந்தது.

ஷெல் தாக்குதலின் போது பல வீடுகள் சேதம் அடைந்தன. (இ-160)

## வீட்டுக் கடன் திட்டம் ஐக்கிய நாணய சங்கம் மூலம்

யாழ்ப்பாணம்,டிச.15 அடுத்த ஆண்டில் ஐக்கிய நாணய சங்கங்களின் மூலமே வீடு கட்டுவதற்கான கடன் வழங்கப்படும்.

யாழ் அரச அதிபர் திரு. மு. பஞ்சலிங்கம் இவ்வாறு கூறினார்.

யாழ். மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசக் கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்; விவசாயம்,நெசவுத் தொழில், கடற்தொழில் கைத்தொழில் போன்ற துறைகளில் இப்பகுதிக் கூட்டுறவு இயக்கம் ஆற்றிய சிறந்த சேவையால் மக்கள் சிறந்த நன்மைகளை பெற்றூர்கள்.

எனினும் வீடு கட்டும் வசதி வழங்கப்படாதது குறைபாடாக இருந்து வந்தது.

இச்சந்தர்ப்பத்தில் வீடமைப்பு அதிகார சபை கடன் உதவத் தொடங்கியது. இப்போது ஐ. நா. சங்கங்கள் மூலம் இக்கடன்கள் வழங்கும் வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன என்றூர்.

சமாசத் தலைவர் திரு. பொ. செல்வரத்தினம், சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. எஸ். ஞானப்பிரகாசம்,கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. இ. ஜெகநாதன் ஆகியோரும் பேசினர்.

வீடு கட்டுவதற்கான கடன்பற்றி சமாசத்தின் நிர்வாகச் செயலாளர் திரு. லோ. வாகீசன் விளக்கம் அளித்தார்.

கணக்கு வைக்கும் முறைபற்றி கூட்டுறவுப் பரிசோதகர் திரு பஞ்சலிங்கம் உரையாற்றினார்.

சமாசத்தின் முன்னாள் தலைவரும் தற்போதைய உபதலைவருமாகிய திரு. வி. கே. சுப்பிரமணியம் நன்றியுரை வழங்கினார். (இ-5)

## முல்லைத்தீவு பகுதியில் கைதான 12 பேரில் 4 பேர் விடுதலை

யாழ்ப்பாணம், டிச. 15 கடந்த மாதம் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள தண்ணீரூற்று; முள்ளியவளை, குமுழமுனை கிராமங்களில் கைது செய்யப்பட்ட 12 தமிழரில் 4 பேர் சனிக்கிழமை விடுவிக்கப்பட்டனர்.

விடுவிக்கப்படாமல் வவுனியா ஆயுதப் படை முகாமில் தடுத்து வைக்கப்பட்ட ஏனைய எட்டுப் பேரின் பெயர்கள் வருமாறு;

1. அருளப்பு யோகநாதன், வயது 23, முல்லைத்தீவு
2. தேவகுரு ஸ்ரீகாந்தா வயது 23, முள்ளியவளை
3. சிவநாயகம் அமிர்தலிங்கம், வயது 18, திரியாய்
4. கனகையா அசோகநாதன், வயது 25, தண்ணீரூற்று
5. வீரகத்தி இளங்கோவன், வயது 20, தண்ணீரூற்று
6. ச. விக்னராசா, வயது 24, மாமூலை
7. அம்பலவாணர் தெய்வேந்திரன், வயது 18, குமுழமுனை
8. த. பரராசசிங்கம், வயது 38, குமுழமுனை (இ–எ)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

# நிதி நெருக்கடியான நேரத்தில் யூனிசெப் உதவுகிறது

## மாநகரசபை ஆணையாளர் பெருமிதம்

யாழ்ப்பாணம்,டிச 15 யாழ் மாநகரசபை பாரிய நிதி நெருக்கடியில் உள்ள இந்நேரத்தில் யூனிசெப் நிறுவனத்தினரே எமக்குக் கை கொடுக்கின்றனர்.

யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு, சி வி. கே. சிவஞானம் இவ்வாறு கூறினார்.

யூனிசெப் திட்ட 40 வருட நிறைவையொட்டி நல்லூர் இந்து விடுதியில் வைபவம் ஒன்று நடைபெற்றது.

தலைமை வகித்துப் பேசுகையில் ஆணையாளர் மேலும் கூறியதாவது;

குழந்தைகளின் பராமரிப்பில் அக்கறையுள்ள இந்நிறுவனம் தாய் சேய் நலம், சத்துணவு, தடுப்பூசி, மலசலகூட மாற்றம், நீர் விநியோகம், மகப்பேற்று விடுதி பராமரிப்பு போன்ற சேவைகளுக்கு மாநகரசபைக்கு நிதி உதவி அளித்து வருகிறது.

குடி நீர் விநியோகம், வடிகால் அமைப்பு, மலசலகூடங்களை மாற்றல் போன்ற பாரிய வேலைத் திட்டங்களை யூனிசெப் மாநகரசபைக்கு செய்து வருகிறது

நாலரைக் கோடி ரூபா செலவுள்ள வடிகாலமைப்புத் திட்டமொன்றிற்கு மாநகரசபை யூனிசெப்பிடம் விண்ணப்பித்துள்ளது

வாளி மலசல கூடங்கள் நிறுத்தப்பட்டு, குழி மலசலகூடங்கள் நிறுவ யூனிசெப் உதவியதுடன், 4 வருடங்களுக்கொரு முறை மலசலகூட குழியைத் துப்புரவு செய்யும் இயந்திரத்தையும் அன்பளிப்பு செய்துள்ளது.

சுகாதாரப் பிரிவிற்கு 4 இரண்டு சில்லு டிராக்டர்களை வழங்கியுள்ளது.

கரையோரப் பகுதியில் தனித்த மலசலகூடமில்லாத ஒவ்வொரு குடும்பத்திற்கும் மலசலகூடம் அமைக்க தலா 2500 ரூபா வழங்க யூனிசெப் முன்வந்துள்ளது.

இப்படி ஆணையாளர் கூறினார்.

தேசிய வீடமைப்பு அதிகாரசபை யாழ் மாவட்ட முகாமையாளர் திரு. சி முருகையா, யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். மாணிக்கவாசகர், சுகாதார வைத்திய அதிகாரி திருமதி கதிர்காமர் ஆகியோரும் உரையாற்றினர். (இ–5)


## விற்பனையாளர் தேவை

அதிஷ்டலாபச் சீட்டு விற்பனை செய்ய பின்வரும் தொகுதிகளில் உள்ள ஆண், பெண் இருபாலாரும் உடனடியாகத் தேவை.

யாழ்ப்பாணம்
பண்டத்தரிப்பு
சங்கானை
மானிப்பாய்
சுன்னாகம்
காரைநகர்
குருநகர்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

ஸ்ருடியோ வீனஸ்
(ஸ்ரீதர் சினிமா அருகாமையில்)
266/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.



## தளபாட மலிவு விற்பனை

புதிய, நவீனமான உருக்கு, மரத் தளபாடங்கள் நத்தாரையொட்டி அதிக விலைக் கழிவுடன் விற்பனையாகின்றன. பல டிசைன்களில் மேசைகள், கதிரைகள், T.V.Stands, Book Rack, கட்டில் மற்றும் பல கவர்ச்சிகரமான பொருட்கள்.

விலை குறைப்பு கையிருப்பு உள்ளவரை மட்டுமே

டைனமிக் என்ஜினியரிங் லிமிற்றெட்
476, பிரதான வீதி, சுண்டுக்குளி
(சென்ற் ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)



## விற்பனைக்கு

பின்வருவன விற்பனைக்குள்ளன:

SUMEET Domestic Mixer (புதியது)
SANSUI Tuner Amp. Cassette Deck, Record Player, Speakers.
SONY 6-band Radio
DEEP FREEZER West point 6 9 c:ft)
A-40 Delivery Van
TYPEWRITER (Portable)

dyn ads 476, பிரதான வீதி, சுண்டுக்குளி.
(சென்ற் ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)


## அங்குரார்ப்பண கூட்டம்

வேலணை, டிச, 15 சரவணை முதலாம் இரண்டாம் வட்டாரங்களுக்கான புதிய ஐக்கிய நாணயசங்க அங்குரார்ப்பணக் கூட்டம் சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலயத்தில் பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் திரு எம். கே. முருகையா தலைமையில் 17 ஆம் திகதி புதன்கிழமை காலை 10·30 மணியளவில் நடைபெறும். (இ–167)

## கப்பலில் வந்த பெரிய பெட்டிகள்

கப்பலில் பெரிய பெட்டிகளில்வந்தபலபொருள்களை காங்கேசன்துறை 'ஹாபர்வியூ' சிப்பாய்கள் துறைமுகத்தில் இருந்து எடுத்துச் சென்றனர்.

வெள்ளிக்கிழமை இச்சம்பவம் நடந்தது.

கவச வாகனங்களில் துறைமுகத்திற்கு வந்த சிப்பாய்கள் துறைமுகத் தொழிலாளர்களைக் கொண்டே இப்பெட்டிகளை ஏற்றிச் சென்றனர். (இ—10)

## படையினருக்கு முழு அதிகாரமும் வழங்கி போராளிகளை அழிப்பாராம் அனுரா

யாழ்ப்பாணம், டிச. 15 ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்தால் சகல ஆயுதப்படையினருக்கும் முழு அதிகாரமும் வழங்கி தமிழ்ப் போராளிகளை முற்றாக அழிப்போம்.

மேற்கண்டவாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

களுத்துறை பொது மைதானத்தில் நடைபெற்ற ஸ்ரீ. ல. சு. க. பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்; வடக்கு-கிழக்கு பகுதியில் நிலவுகின்ற பிரச்சினைக்கு யுத்தம் தவிர வேறு வழி இல்லை.

படையினருக்கு முழு அதிகாரமும் வழங்கி போராளிகளைக்கொன்று அழிப்பதைத் தவிர வேறு எந்த வழியாலும் பிரச்சினைக்கு தீர்வு கிடையாது.

எமது ஜனாதிபதியினாலோ அல்லது இந்திய பிரதமரினாலோ கூட போராளிகளை வழிக்குக் கொண்டுவர முடியாமல் உள்ளது.

இதற்குக் காரணம் அவர்களால் கையாளப்பட்ட வழிகள் பிரச்சினைக்குரிய தீர்வைத் தரக் கூடியவை அல்ல.

யுத்தம் தவிர வேறு எந்த வழியும் இப்பிரச்சினைக்கு உரியதல்ல.

நாம் ஆட்சியை 1977 இல் ஒப்படைத்தபோது யாழ்ப்பாணத்தில் 89,000 சிங்களவர் வசித்தனர். இன்று ஒருவர் கூட இல்லை. நாம் ஆட்சிக்கு வந்தால் மீண்டும் சிங்களவரை குடியமர்த்துவோம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அன்று விட்ட பிழையை இனியும் விடப்போவதில்லை.

இப்படி அனுரா கூறினார். (இ–21)

## நகைச்சுவை மன்னன் மாஸ்டர் சிவலிங்கம் பட்டமளித்துக் கௌரவம்

மட்டக்களப்பு, டிச 15 பிரபல சிறுகதை எழுத்தாளரும், மட்டக்களப்பு பொது நூல் நிலைய சிறுவர் கலைப் பொறுப்பாசிரியருமான மாஸ்டர் சிவலிங்கம் 'நகைச்சுவை மன்னன்' பட்டம் அளித்துக் கௌரவிக்கப்பட்டார்.

அண்மையில் நடைபெற்ற தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கோட்டைமுனை இளைஞர் கழக வருடாந்தப் பரிசளிப்பு விழாவின் போது கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத் ... வேந்தர் பேராசிரியர் திரு. கே. டி. அருட்பிரகாசம், மாஸ்டருக்கு பொன்னாடை போர்த்த கலாநிதி திரு எப். எக்ஸ். சி. நடராசா 'நகைச்சுவை மன்னன்' என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்.

மாஸ்டர் சிவலிங்கம் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாலர் பாடசாலைச் சிறுவர்களுக்கும், ஏனைய பாடசாலைச் சிறுவர்களுக்கும் கதை சொல்லும் சேவை ... ஆற்றி வருகின்றார். (இ–14)

# பாட விதானங்களில் அடுத்த ஆண்டு மாற்றம்

மானிப்பாய், டிச 15 1987 ஆம் ஆண்டிலிருந்து பாடசாலை கல்விப் பாடவிதானங்களில் பல மாறுதல்கள் செய்யப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

திருத்தியமைக்கப்பட்ட பாடவிதானத்தை அடிப்படையாகக் கொண்டு ஆண்டு ஒன்று முதல் ஆண்டு 3 வரையான ஒன்றிணைக்கப்பட்ட பாடங்கள் தனித்தனி பாடங்களாக பாடவேளைகள் ஒதுக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு பாடங்களுக்கும் எவ்வளவு மணித்தியாலங்கள் ஒரு வாரத்துக்கு கற்பிக்கப்படவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் போதிக்கப்பட்டு வந்த சுகாதாரக் கல்வி 1987 முதல் 8ஆம் ஆண்டுடன் நிறுத்தப்படும். ஆண்டு 9,10,11 இல் அப்பாடம் போதிக்கப்படமாட்டாது.

ஆண்டு 6இல் வாழ்க்கைத் திறன் கல்வி என்ற பாடம் புதிதாகப் புகுத்தப்படவுள்ளது

ஆண்டு 6, 7, 8 ஆகிய வகுப்புகளுக்கு நூலகம் என்ற பாடம் வாரத்தில் ஒரு நாளைக்கு நடைபெறும்.

ஆண்டு 9, 10, 11 இல் கற்பிக்கப்படவேண்டிய தொழில் நுட்பப் பாடங்களுள் ஒன்றாக — தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப பாடங்களுக்கு மேலதிகமாக வர்த்தகமும் கணக்கியலும் என்ற பாடமும் சேர்த்துக் கொள்ளப்படுகிறது.

இதற்கேற்ப வர்த்தகமும் கணக்கியலும் என்ற பாடம் அழகியற் கல்விப் பாடத்துடன் விருப்புப்பாடமாக கருதப்படவேண்டும் என்ற முன்னைய அறிவித்தல் 10 ஆம் ஆண்டுக்கு செல்லுபடியற்றதாகும்.

அத்துடன் இதுவரை காலமும் வர்த்தகமும் கணக்கியல் என்ற பாடத்துக்கு ஒதுக்கப்பட்ட ஒருவாரத்துக்கான பாடவேளைகள் மூன்றிலிருந்து நான்காக உயர்த்தப்பட்டுள்ளது.

திருத்தியமைக்கப்பட்டுள்ள பாடத்திட்டங்களிற்கு அமைய முதல் தடவையாக க.பொ.த. சாதாரண பரீட்சை 1988 ஆம் ஆண்டு நடைபெறும்.

—இவ்வாறு கல்வி அமைச்சின் செயலாளர் சகல பாடசாலைகளுக்கும் அறிவித்துள்ளார்.(உ90)

## வீடமைப்பு கடன் கருத்தரங்கு

வேலணை, டிச. 15 வீடமைப்புக் கடன்கள் தொடர்பான கருத்தரங்கு புங்குடுதீவு மத்தி ஶ்ரீமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1 30 மணி அளவில் நடைபெறும்.

வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. தா. சந்திரசேகரம் தலைமை வகிப்பார்.

கருத்தரங்கில் புங்குடுதீவு, நயினாதீவு பகுதிகளில் அமைந்துள்ள ஐக்கிய நாணய சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள்.

இவர்களுக்கு வீடமைப்புக் கடன் வழங்குதல், கணக்கு வைக்கும் முறைகள் தொடர்பாக விளக்கங்கள் கொடுக்கப்படும்.

இதே மாதிரியான இன்னொரு கருத்தரங்கு 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 00 மணிக்கு வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறும். (இ–167)

## வவுனியாவில் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், டிச. 15 வவுனியாவில் நேற்று ரோந்துசென்ற சிப்பாய்கள் பல இளைஞர்களைக் கைதுசெய்தனர்.

நேற்றுக்காலை 9 மணியளவில் ஈரப்பெரியகுளம் முகாமில் இருந்து புறப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட சிப்பாய்கள் பண்டாரிக்குளம், புளியங்குளம், வி. சி. வங்களாவடி ஆகிய பகுதிகளைச் சுற்றி ரோந்து வந்தனர்.

அப்போதே வழியில் கண்ட இளைஞர்களை இவர்கள் கைது செய்தனர். (இ–10)

## இளைப்பாறினார்

சாவகச்சேரி, டிச.15 சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. வே. நடராசா தமது 35 வருட ஆசிரியசேவையில் இருந்து இளைப்பாறினார்

20 வருடங்கள் தொடர்ந்து இக்கல்லூரியில் ஆற்றிய சேவையைப் பாராட்டி ஆசிரிய சகோதரத்துவ சங்கம் பாராட்டுவிழாவை நடத்தியது. பிரதம விருந்தினராக வட்டாரக் கல்வி அதிகாரி திரு.அ. தங்கராசா கலந்துகொண்டார். (இ–31)

## வால் பேத்தைகள் முதலிடம்

யாழ்ப்பாணம்,டிச.15 யாழ்மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற நாடகப் போட்டியில் இளவாலை சென்ஹென்றீஸ் கல்லூரி மாணவர்களின் ''வால் பேத்தைகள்'' நாடகம் முதலிடத்தைப் பெற்றது

இன்றைய மாணவர்கள் வீட்டிலும், பாடசாலையிலும், ரியூட்டரிகளிலும், காலை, மாலை, இரவில் எப்போதும் படிப்பதால், வெறும் தலை பெருத்த வால் பேத்தைகள் போல் உள்ளனர் என்பது இந்த நாடகத்தில் சித்திரிக்கப்பட்டிருந்தது. (இ.5)

## அன்பளிப்பு

வட்டுக்கோட்டைடிச15 காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்திற்கு பெரிய அளவிலான மணிக்கூடு ஒன்று அன்பளிப்புச்செய்யப்பட்டுள்ளது.

காரைநகர் களபூமியைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் திரு. சி; எஸ். கனகரத்தினம்என்பவரே இந்த மணிக்கூட்டை அன்பளிப்புச் செய்தார். (இ–161)

## தொலைத்தொடர்பு நிலையம் திருத்தம்

திருகோணமலை டிச.15 குண்டு வைத்து தகர்க்கப்பட்ட திருகோணமலைத் தொலைத்தொடர்புத் திணைக்களத்தை திருத்தும்வேலையில் இராணுவபொறியியலாளர்களின் உதவியுடன் தொலைத் தொடர்பு திணைக்கள பொறியியலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட நட்டம் சுமார் 10 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளதாம்.

இயந்திரங்கள், கட்டடம் முழுமையாகச் சேதமடைத்து விட்டன. (உ—எ21)

## கொடிகாமத்தில் புதிய சந்தை

யாழ்ப்பாணம், டிச. 15 கொடிகாமம் சந்தைக்கென புதிய கட்டடம் அமைப்பதற்கு யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை 13 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இக்கட்டடத்தில் மீன் சந்தை, வாடகைக்கடைகள், தபால் நிலையம் என்பன அமையவுள்ளன. (உ–5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

நம்மிடம் உள்ள குறைகளை நாளுக்கு நாள் குறைத்துக்கொண்டே வரவேண்டும் அப்பொழுதுதான் நாமும் மற்ற எழுச்சி பெற்ற மனிதர்களைப்போல எழுச்சி பெற முடியும். — தாகூர்.

உதயன்

இல.15 3ஆவது ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் 15-12-1986 தொலைபேசி: 24805 22073 த.பெ இல. 83

## அண்ணன், தம்பிகள்

ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சியின் பிரதான பேச்சாளர்களில் ஒருவராகத் திகழ்பவர் அத்தனகலை எம் பி திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசின் பிரதி பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்தவர் இவர்.

இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணி நடத்திய கருத்தரங்கு ஒன்றில் அவர் கலந்து கொண்டு உரையாற்றி இருக்கிறார்.

அதிகாரப் பகிர்வுக்கு நாம் எதிரானவர்கள் அல்லர். ஆனால் உள்ளூராட்சி அமைப்புகள் மூலமே அதிகாரப் பகிர்வு நடக்க வேண்டும். மாகாண சபைகள் நாட்டைப் பிரிக்கும். அதனால் தான் நாம் அந்த முறையை எதிர்க்கிறோம்,— இவ்வாறு இரண்டுபட்ட, முரண்பட்ட கருத்துக்களை அவர் தெரிவித்திருக்கிறார்.

ஸ்ரீலங்கா ஆட்சியிலேயே அதிகாரத்தை ஒரே இடத்தில் குவித்து வைத்திருக்காமல் கீழ் மட்டத்துக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று கூறப்பட்டது. மாவட்ட அரசியல் அதிகாரிகள் முறையைக் கொண்டு வந்தவர்கள் சுதந்திரக் கட்சியினரே.

ஆனால் அதிகாரம் மாவட்ட மக்களுக்கு வழங்கப்படுவதற்குப் பதிலாகத் தனிநபரிடம் கைமாற்றப்பட்டது. அது ஒருவித சர்வாதிகார ஆட்சியாக முடிந்தது. மாவட்ட அதிகாரிகள் தமக்கு வேண்டியவர்களுக்கு மட்டுமே நன்மை செய்யும் விதத்திலும், கட்சிச் செல்வாக்கை வளர்க்க உதவும் விதத்திலும் தமது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தார்கள். லஞ்சம், ஊழல், உறவினருக்கு உதவுதல் ஆகிய சமூக விரோதச் செயல்கள் வளர்ந்தன. சுதந்திரக் கட்சியின் செல்வாக்குக் குறைந்து அது மண்ணில் விழுவதற்கு மாவட்ட அதிகாரிகள் முறையும் ஒரு காரணம் எனலாம்.

அதிகாரப் பகிர்வை நினைத்தவர்கள் சர்வாதிகாரத்துக்கு இடம் கொடுத்து வளர்த்தார்கள். இப்போது உள்ளூராட்சி அமைப்புகள் மூலமான அதிகாரப் பகிர்வையே தாம் விரும்புவதாகவும், ஆதரிப்பதாகவும் தெரிவிப்பது அவர்களின் அரசியல் நிலையற்ற தன்மையைப் புலப்படுத்துகிறது.

உள்ளூராட்சி அமைப்புகள் மட்டத்தில் அதிகாரப் பகிர்வை விரும்புபவர்கள் மாகாண மட்டத்தில், மாநில மட்டத்தில் செய்யப்படும் அதிகாரப் பகிர்வை ஏன் எதிர்க்க வேண்டும்? அது அடிப்படைக் கோட்பாட்டில், கொள்கையில் ஆட்டம் காணுவது ஆகாதா?

மாநிலமட்ட அதிகாரப் பகிர்வால் சிறுபான்மையினருக்குச் சில உரிமைகளாவது கிடைத்துவிடுமே என்ற அச்சம் தான் மாகாண அல்லது மாநில ஆட்சி முறைக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கத் தூண்டுகிறது. அவ்வாறானால் சுதந்திரக் கட்சியினர் சிறுபான்மையினருக்கு எதிரானவர்கள் அல்லர் என்பது எவ்விதத்தில் பொருந்தும்?

சிறுபான்மையினருக்கு உரிமைகள் வழங்கும் விடயத்தில் ஐ. தே. கவும், சுதந்திரக் கட்சியும் அண்ணன் தம்பிகளே. ஒற்றை ஆட்சி முறையின் கீழ் சிறுபான்மையினருக்கு சில சிறிய அதிகாரங்களை, சலுகைகளை வழங்கித் திருப்திப்படுத்தலாம் எனக் கனவு காண்கிறார்கள்.

சிறுபான்மையினருக்கும், பெரும்பான்மையினர் போலவே தம்மைத் தாம் ஆளும் ஆட்சி அதிகாரம் என்ற பிறப்புரிமை உண்டு. அதனை அவர்களுக்கு வழங்கி சகோதரர்களாக, சமாதானமாக வாழவேண்டும் என்ற எண்ணம் சிங்களக் கட்சிகள் இரண்டுக்குமே இல்லை. சிங்கள மக்களையும் அதே நிலைப்பாட்டுக்குத்தான் அவர்கள் உருவாக்குவார்கள்.

உண்மை நிலை இவ்வாறிருக்க—

ஆட்சியைப் பகிர்ந்து கொள்ளும் பிரச்சினையை எப்படிச் சமாதானமாகத் தீர்க்க முடியும்?

# ஆப்கான், ஈரான் எல்லைகளில் அமெரிக்க இராணுவ தளங்கள்

## யுத்த மேகம் சூழ்கிறதா?

இஸ்லாமாபாத் டிச 14

ஆப்கானிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகளுடனான பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் இராணுவத் தளங்களை அமைப்பதற்கு பாகிஸ்தான் அனுமதியை அமெரிக்காவிற்கு வழங்கியுள்ளதா?

இந்த நடவடிக்கை மூலம் அயல் நாடுகளை யுத்தமேகம் சூழும் அபாயநிலை உருவாகி வருகின்றதா?

இவ்வாறான சந்தேகங்களை ரஷ்யா சென்றிருக்கும் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி நஜிபுல்லா வெளியிட்டார்.

அமெரிக்காவின் இராணுவத் தளங்கள் பெரும்பாலும் ஆப்கானிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகளின் பாகிஸ்தான் எல்லையை ஒட்டிய பாலுசிஸ்தான் மாகாணத்தில் அமையலாம் எனவும் நஜிபுல்லா தெரிவித்தார்.

பாலுசிஸ்தான் மாகாணத்தில் 32 புதிய இராணுவத் தளங்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும்—

பி3, ஓடியன் ரகுபோர் விமானங்களை அமெரிக்கா இத்தளங்களில் பாவிக்க அனுமதி வழங்கப்பட்டதாகவும் நேற்று முன்தினம் பாகிஸ்தான் இராணுவப்படைகளின் கூட்டுத் தலைவர் ஜெனரல் ராஹினுதீன் கான் பேட்டி ஒன்றில் கருத்து வெளியிட்டிருப்பது மேலும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது (ஓ)

## ஆப்கானில் தேசிய ஐக்கிய அரசு

ஆப்கானிஸ்தானில் தேசிய ஐக்கிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு ரஷ்யா விஜயம் செய்துள்ள ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி நஜிபுல்லா தெரிவித்தார்.

வெளிநாடுகளில் வசிக்கும் ஆப்கானிஸ்தான் பிரசைகளை உள்ளடக்கியதாக இது அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ரஷ்ய துருப்புக்கள் நீண்ட காலத்திற்கு ஆப்கானில் நிலைகொண்டிருக்கமாட்டாது. அரசியல் தீர்வு காணப்பட்டால் சகல துருப்புக்களும் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறிவிடும். (ஓ)

## துருவத்தில் முதலாவது வங்கி

புவனர்ஸ் அயர்ஸ், டிச 14

அன்டார்டிக்கா பிரதேசத்தில் வங்கியொன்றை ஆர்ஜன்டீனா இன்று ஆரம்பித்து வைத்தது.

அந்தப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது வங்கி இதுவாகும்,

அன்டார்டிக்கா பிரதேசத்தில் மக்கள் அதிக அளவில் குடியேறுவதை ஊக்குவிப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஓ)

## றேகனை விட கோர்பச்சேவ் சிறந்த தலைவர்

அம்ஸ்டர்டாம், டிச.14

அமெரிக்க அதிபர் றேகனிலும் பார்க்க ரஷ்யத் தலைவர் கோர்பச்சேவ்வை சிறந்த தலைவர் என்று மேற்கு ஐரோப்பா எடை போட்டுள்ளது.

அம்ஸ்டர்டாமில் உள்ள நிறுவனம் ஒன்று நடத்திய கருத்துக் கணக்கெடுப்பில் இது தெரிய வந்தது.

அந்த நிறுவனம் விசாரித்தவர்களில் 61 சதவிதமானோர் கோர்பச்சேவ்வைச் சிறந்த தலைவர் என்றனர்

32 சதவீதமானோரே அதிபர் றேகனை விரும்பினர் (இ-எ)

## சூரினமில் 13 இளைஞர் சுட்டுக் கொலை

பராமரிபோ, டிச 14

தென் அமெரிக்க நாடானசூரினமில் அரசாங்கத் துருப்புக்கள் கடந்தவாரம் உதைபந்தாட்டத்தில் ஈடுபட்டிருந்த 13 இளைஞர்களைச் சுட்டுக்கொலைசெய்தனர்

சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞர்கள் 16 வயதிற்கும் 20 வயதிற்கும் இடைப்பட்ட அப்பாவி இளைஞர்கள்.

ஆயுதப் படையினர் இந்த இளைஞர்களைத் தரையில் படுக்குமாறு பணித்தபின்னர் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

சூரினமின் முன்னாள் இராணுவ வீரரான ரொனி ரான்ஸிக் தலைமையிலான கெரில்லாக்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை சூரினம் அரசு அதிகரித்திருக்கிறது. (ஓ)

## வெளி உலகில்

## தடுமாறுகிறார் றேகன்

வாஷிங்டன், டிச.14

அமெரிக்க ஜனாதிபதி றேகன், தனது முன்னாள் உதவியாளர் இருவரை ஈரான் ஆயுத விற்பனைப் பிரச்சினையில் சாட்சியம் அளிக்குமாறு முதற்தடவையாகக் கேட்டுள்ளார்

முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் டெக்ஸ்ஸரும் அவரது உதவியாளருமான ஒலிவர் நோத்தும் விசாரணைகளில் ஒத்துழைக்க வேண்டும் என றேகன் கருத்து வெளியிட்டார்.

இதற்கு முன்னர் ஜனாதிபதி றேகன் இந்த இருவரும் சாட்சியமளிக்கத் தேவையில்லை எனப் பகிரங்கமாகக் கூறி வந்தது குறிப்பிடத்தக்கது.

தற்போது தனது முடிவை மாற்றிக் கருத்து வெளியிட்டிருக்கிறார் அவர். (ஓ)

## பங்களாதேஷ் மத்தியஸ்தம்

டாக்கா, டிச. 14

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே மத்தியஸ்தம் செய்து வைக்க பங்களாதேஷ் முன் வந்துள்ளது.

பங்களாதேஷ் அதிபர் ஜெனரல் முகமட் எர்ஷாத் இதனை டாக்காவில் வைத்து அறிவித்தார்.

இந்தியா-பாகிஸ்தான் தகராறில் பங்களாதேஷ் ஒரு பக்கமும் சாரவில்லை. சார்க் அமைப்பு அதிகாரிகளின் துணையுடன் மத்தியஸ்தம் செய்ய பங்களாதேஷ் தயாராக உள்ளது.

இப்படி பங்களாதேஷ் அதிபர் எர்ஷாத் அறிவித்தார்.

அண்மையில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி பாகிஸ்தானுக்கு விடுத்த எச்சரிக்கை ஆச்சரியத்தைத் தருகிறது என்றும் பங்களாதேஷ் அதிபர் எர்ஷாத் சொன்னார். (ஓ)

## தேர்தல் ஆணையாளரின் அறிக்கைப்படி
# அரசு உடனே ராஜினாமா செய்ய வேண்டும்
### சிறிமா கோருகிறார்

கொழும்பு, டிச.15

தேர்தல் ஆணையாளரின் அறிக்கையின்படி, இலங்கை அரசு உடனடியாக இராஜினாமாச் செய்ய வேண்டும்.

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டார நாயக்கா சுதந்திரக் கட்சி இளைஞர் மாநாட்டில் பேசுகையில் முன் கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

சனிக்கிழமை காலை கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் நடந்த இம்மாநாட்டில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்

மாநாட்டுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் திருமதி பண்டார நாயக்கா சொன்னதாவது;

1982 இல் நடந்த சர்வசன வாக்கெடுப்பில் நேர்மையற்ற, ஒழுங்கீனமான சம்பவங்கள் நடந்தன என்று தேர்தல் ஆணையாளர் தனதுஅறிக்கையில் கூறி இருக்கிறார்

அந்த அறிக்கையின் படி இன்றைய அரசு பதவியில் இருப்பதற்கு சட்டபூர்வமான உரிமை கிடையாது. ஆகவே இந்த அரசு உடனடியாகப் பதவி விலக வேண்டும்.

யு. என் பி. அரசினால் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது முடிவின்றி பேச்சுக்களை நீடித்துக் கொண்டு போகவே இன்றைய அரசு விரும்புகின்றது.

தேர்தல் ஒன்றை நடத்தினால் மக்கள் ஆட்சிப் பொறுப்பை எம்மிடமே தருவர். இது நிச்சயம். அது மட்டுமல்ல, நாமே ஆட்சிக்கு வந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவோம்.

இப்படி திருமதி பண்டார நாயக்கா சொன்னார். (இ-ஐ-எ)

## கல்விக்கு நாம் செய்யும் செலவு
# எதிர்காலச் சந்ததி தலை குனியாது வாழ வழி வகுக்கும்

சுன்னாகம், டிச. 15

பல அழிவுகளுக்கு மத்தியிலும், கல்வியறிவுக்காக நாம் செய்யும் செலவுகள் எமது எதிர்காலச் சந்ததியினர் தலை குனியாது வாழ வழிவகுக்கும்.


யாழ் அரச அதிபர் திரு. வை. மு பஞ்சலிங்கம் இவ்வாறு குறிப்பிட்டார்.

சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவு சங்க கலாசார மண்டபத்தில் தலைவர் திரு. சி. குமரவேல் தலைமையில் புலமைப் பரிசில் வழங்குதலும், புனருத்தாரண நிதியம் ஆரம்பித்தலுமான விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அரச அதிபர் உரையாற்றினார்

தலைவர் திரு. சி. குமரவேல் தமதுரையில் சுன்னாகம் பகுதியின் நீண்டநாள் குறையாகவுள்ள கலாசார மண்டபத்தினை அமைத்துத் தருமாறும் எமது பிரதேச மக்கள் பலத்த கஷ்டங்களின் மத்தியிலும் உற்பத்தி செய்யும் கைத்தொழிற் பொருள்களுக்கு சிறந்த சந்தை வாய்ப்பை பெற்றுத் தருமாறும் அரச அதிபரைக் கேட்டுக் கொண்டார்.

உடுவில் உதவி அரச அதிபர் திரு ஆ. மகாலிங்கம், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் திரு. வை. சுந்தரலிங்கம், வேலணை ஆரம்ப நீதிமன்ற நீதிவான் திரு பூ. சதாசிவரத்தினம், விரிவுரையாளர் திரு சபா ஜெயராசா, யாழ் மாவட்ட உதவி செயலாளா திரு. சு. பரமநாதன், பிரஜைகள் குழு தலைவர் திரு. தி. மாணிக்கவாசகர், வைத்திய கலாநிதி திரு. ஆ. நடராஜா, தேசிய கூட்டுறவுச்சபைத் தலைவர் திரு. சி. சிவமகாராஜா உட்பட மேலும் பலர் உரையாற்றினர்.

புன்னாலைக்கட்டுவன் செல்வி சித்திரகலா இராசா, சங்குவேலி செல்வி இரஞ்சினி இராஜேஸ்வரன், ஏழாலை செல்வி மல்லிகா சுந்தரம் ஆகியோர் அரச அதிபரிடமிருந்து புலமைப் பரிசிற் காசோலையைப் பெற்றுக் கொண்டனர். (இ-2?)



**பொய்யாமொழி**

குறள்:

அற்கா இயல்பிற்றுச் செல்வம் அது பெற்றால்
அற்குப ஆங்கே செயல்.

பொருள்:

செல்வம் நிலைக்காத இயல்பை உடையது அத்தகைய செல்வத்தைப் பெற்றால், பெற்ற அப்பொழுதே நிலையான அறங்களைச் செய்ய வேண்டும்.

## பழுதடைந்த பாலம் திருத்துவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிச.15

பழுதடைந்த பாலங்களை திருத்தவென யாழ் திட்டமிடல் பணியகம் நிதி ஒதுக்கியுள்ளது என திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. சு. சிவதாசன் தெரிவித்தார்.

பண்டத்தரிப்பு பாலத்திற்கு 4 லட்சம் ரூபாவும், வல்லைப் பாலத்திற்கு 3 லட்சம் ரூபாவும் வீரவாளி வாதரவத்தைப் பாலத்திற்கு 2 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (உ-5)

## கூட்டெரு தயாரிக்க ஏற்பாடு

கிளிநொச்சி, டிச. 15

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விவசாயிகளிடையே கூட்டெரு தயாரிக்கும் முறையினை அறிமுகம் செய்யும் நோக்குடன் சுமார் 50 கூட்டெரு தயாரிக்கும் இடங்களை அமைக்க கிளிநொச்சி விவசாய விரிவாக்கப் பகுதியினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதற்கென சுமார் 25 ஆயிரம் ரூபா பணத்தை எதிர்வரும் 87 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து தருமாறு கிளிநொச்சி விவசாய விரிவாக்க உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். ரி. பத்மநாதன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரைக் கோரியுள்ளார். (உ-76)

## கிராமப்புறங்களிலுள்ள
# வைத்தியசாலைகளை விஸ்தரிக்க நிதி
### யாழ். அபிவிருத்திச் சபை ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிச. 15

கிராமப்புற மக்களின் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் வகையில் கிராமப்புற வைத்திய சாலைகளை புனரமைத்து விஸ்தரிப்புச் செய்ய யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது.

முதற்கட்டமாக தொல்புரம், சங்கானை, பண்டத்தரிப்பு, கோண்டாவில், ஏழாலை அரசினர் வைத்தியசாலைகளுக்கு மேலதிக கட்டடங்கள் அமைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இவற்றிற்கு 15 லட்ச ரூபாவை அபிவிருத்தி சபை ஒதுக்கியுள்ளது என யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை உதவிச் செயலாளர் திரு. கு. பரமநாதன் தெரிவித்தார். (உ-5)

## களஞ்சிய அறை அமைப்பதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிச 15

தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலைக் களஞ்சிய அறை கட்டுவதற்காக யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை நிதி ஒதுக்கியுள்ளது.

காங்கேசன்துறைசீமெந்துக் கூட்டுத்தாபனம் இதற்கான கட்டடவேலைகளைப் பொறுப்பேற்றுள்ளது. (உ)

## செயலகத்திற்கு 3 மாடி கட்டடம்

யாழ்ப்பாணம், டிச.15

யாழ் செயலக வளவில் யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபைக்கென 25 லட்ச ரூபா செலவில் புதிய மூன்று மாடிக் கட்டடம் ஒன்று கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. (உ-5)

## இனவிகிதாசார புள்ளி விவரம் திரட்டப்படுகிறது

மட்டக்களப்பு, டிச.15

கிழக்கு மாகாணத்தில் இன விகிதாசார புள்ளி விவரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அரச அதிபர்களைக் கேட்டுள்ளது. (உ-21)

# சட்ட உதவி
## பூஸா இளைஞர்களுக்கு
### கிழக்கில் நடவடிக்கை

மட்டக்களப்பு, டிச. 15

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த தீவிரவாத சந்தேக நபர்களுக்குச் சட்ட உதவி வழங்க மட்டக்களப்பில் அமைப்பொன்று முன்வந்துள்ளது.

பூஸா முகாமில் 15 மாதங்களுக்கு மேலாக எந்தவித விசாரணையுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்களுக்கு, உறவினர்களுக்கு இவ்வுதவி வழங்கப்படும்.

உதவி தேவைப்படுவோர் கத்தோலிக்க சங்கக் கட்டடத்திலுள்ள அமைப்பு அலுவலகத்தில் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-21)

## 1987 வரவு செலவு திட்டத்தில்
# கிளிநொச்சிக்கு ரூ. 40 லட்சம் ஒதுக்கீடு

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி வேலைகளுக்கென 1987ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிதியிலிருந்தும், மாவட்ட அபிவிருத்திச்சபை நிதியிலிருந்தும் சுமார் 40 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்படும்.

இதில் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு 20 லட்சம் ரூபாவும், பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு 12 லட்சம் ரூபாவும், பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு 8 லட்சம் ரூபாவும் வழங்கப்படும்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான திரு. ஜெகா செந்தில் நாதன் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற அபிவிருத்தி நிதி ஒதுக்கீடு முன்னுரிமைப்படுத்தல் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்றில் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் கிளிநொச்சிக் கச்சேரி சிரேஷ்ட திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் திரு.வி.செ. சுவாமிநாதனும் பங்குபற்றினார். (உ-76)

## கிளிநொச்சியில் வைத்திய அதிகாரி அலுவலகம் மீண்டும் இயங்குகிறது

கிளிநொச்சி, டிச.15

கிளிநொச்சியில் கடந்த ஜூன்மாதம் முதல் ஏற்பட்ட அசம்பாவிதத்தினால் மூடப்பட்ட கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் கடந்த முதலாம் திகதி முதல் பரந்தனிலுள்ள தனியார் வீடு ஒன்றில் இயங்க ஆரம்பித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் இயங்கிய இந்த அலுவலகம் கடந்த ஜூன் மாதம் முதல் மூடப்பட்டு தற்காலிகமாக பளை அரசினர் வைத்தியசாலையில் இயங்கிவந்தது.

இதேவேளை கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய டாக்டர் திருமதி லலிதாம்பிகை சர்வானந்தா தனது பதவியினை இராஜினாமாச் செய்தமையைத் தொடர்ந்து சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரியாக கடமையாற்றும் டாக்டர் எஸ். நடராசா கிளிநொச்சி பதில் சுகாதார வைத்திய அதிகாரியாக கடமையாற்ற நியமிக்கப் பட்டுள்ளார். (உ-76)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

BITSMANS INSTITUTES
MANIPAY.
ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க
3மாத பயிற்சி வகுப்புகள்
Spoken English
[with
GRAMMAR
By Mr.
M. M. தேவராஜா
ஆரம்பம்: 20-12-86 Sat 5-00 p. m.

# உதயன்

15 - 12 - 1986 திங்கட்கிழமை

BITSMANS INSTITUTES
87ம் MANIPAY 2வது பிரிவு
G.C.E. O/L
கல்வி ஆண்டு 10ம், 9ம், 8ம், 7ம், 6ம்
வகுப்புகளுக்குரிய சகல பாடங்களும்
எமது வழமையான Super Grade
ஆசிரியர் குழுவினுல் கற்பிக்கப்படுகின்றது
ஆரம்பம்: 17 - 12 86 புதன் 7.30 a. m.
(விண்ணப்பங்களை முன்கூட்டியே பதிவுசெய்யவும்)

# தமிழர் உணர்வுகளை ஒருபகுதி சிங்களவர் உணர்ந்துள்ளனர்

## கிறிஸ்தவ சங்கத் தூதுக்குழு பேட்டி

– அலுவலகச் செய்தியாளர்:- எஸ். ஜே. பி. ரட்ணதுரை

யாழ்ப்பாணம், டிச. 15
தமிழ் மக்களின் உணர்வுகளை, அபிலாஷைகளை உரிமைப் போராட்டங்களைப் பற்றி தற்போது சிங்கள மக்களில் ஒரு பகுதியினராவது ஓரளவு புரிந்துள்ளனர்; உணர்ந்தும் வருகின்றனர்.

யாழ்ப்பாணம்வந்துள்ள தேசிய கிறிஸ்தவ சங்கத் தூதுக் குழுவினர் உதயனுக்கு இவ்வாறு தெரிவித்தனர்.

ஹோட்டல்ஞானம்ஸில் தங்கியிருந்த தூதுக்குழுவினரை உதயன் செய்தியாளர் நேற்றுக் காலை பேட்டி கண்டார்.

செய்தியாளரின் கேள்விகளுக்கு அவர்கள் கூட்டாகவே பதிலளித்தனர்.

இப்பேட்டியில் குருநாகல் அங்கிலிக்கன் சபை பிஷப் வண. அன்ருகுமாரகே, மெதடிஸ்த திருச்சபைத்தலைவர் அருட்திரு ஹறோல்ட் பெர்ணுண்டோ, பிரஸ்பிரிற்றேரியன் சபை அருட்திரு ஜோர்ஜ் ஸ்ரீபன், கிறீஸ்தவ சபையின் தகவல் தொடர்பு அதிகாரி திரு. றெஜி எபறீசன், கிறிஸ்தவ மாணவர் இயக்கச் செயலாளர்திரு லக்ஷ்மன் குணசேகர ஆகியோர் கலந்து கொண்டனர் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:

சிங்கள—தமிழ் மக்களிடையேயான புரிந்துணர்வுக்கு திரு விஜயகுமாரணதுங்காவின் யாழ் விஜயம் ஒருபடிக்கல்லாக அமைந்தது. எமது விஜயம் ஒருமைல் கல்லாக அமையும் என எண்ணுகிறோம்.

நாம் இங்கே பிரஜைகள் குழுக்கள், அன்னையர் முன்னணி, இயக்கங்கள், கிறீஸ்தவ சபையினர் ஆகியவர்களுடன் பேச்சுக்கள் நடத்தியும், சில இடங்களை நேரில் சென்று பார்வையிட்டும் இங்குள்ள நிலைமைகளை அறிந்துள்ளோம்.

### அப்பாவிகள் பலி

இங்கே நடக்கும் இராணுவத் தாக்குதலின் போது பலியாவது அப்பாவிப் பொது மக்களே என்பதை பருத்தித்துறை பகுதிக்கு நேரில் சென்ற போது கண்டோம்.

இங்குள்ள நிலைமைகளை சிங்கள மக்களுக்கு தொடர்ந்து எடுத்துக் கூறுவோம்.

கிழக்கு மாகாணத்தில் எமது சபை பல அகதி முகாம்களுக்கு உதவி செய்து வருகிறது.

திருமலையில் 20,000 தமிழர்கள் அகதிகளாக முகாம்களில் உள்ளனர். 6,000 வீடுகள் வரை சேதமாக்கப்பட்டுள்ளன. எமது சபை புனர் நிர்மாண உதவிகளை அவர்களுக்குச் செய்து வருகிறது

### நிவாரணம்

இங்குள்ள திருமலை அகதிகளின் பிரச்சினைகளை அவர்களது முகாம்களுக்குச் சென்று பார்த்ததில் புரிந்து கொண்டோம்.

பலருக்கு நிவாரண உதவிகளை அரசு இடை நிறுத்தியுள்ளது வருந்தத்தக்கது.

சுமுகமான சூழ்நிலை ஒன்று உருவாகுபவரை அவர்களுக்கு இங்கே வைத்து நிவாரண உதவிகளை வழங்குமாறு நாம் அரசைக் கேட்கவுள்ளோம்.

யாழ்ப்பாணத்தைப் பற்றி அரசு கூறியவை எவ்வளவு தூரம் பொய் என்பதை இங்கே வந்து தெரிந்து கொண்டோம்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை நாம் அங்கீகரிக்கும் அதே வேளையில், உரிமைகளைப் பெறுவதற்கான வழிகள் ஆயுத ரீதியாக இல்லாது அமைதியான பேச்சுக்கள் மூலமாக அமைய வேண்டும் என விரும்புகிறோம், இதையே பல முறை அரசிடமும் வலியுறுத்தியுள்ளோம் என்றனர். (அ–5)

## ஈ. பி. ஆர். எல். எவ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கவும் —

அதனையடுத்தே மோதல்கள் வெடித்ததாகவும் புலிகள் இயக்கப் பேச்சாளர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

இதன் பின்னர் சனிக்கிழமை முன்னிரவு நேரத்தில் ஒரே சமயத்தில் பல இடங்களில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நிகழ்த்தினர்.

தமிழ் பிரதேசங்கள் முழுவதிலும் ஈ.பி.ஆர். எல்.எவ். இயக்க முகாம்கள் மீது புலிகள் இயக்கப் போராளிகள் திடீர் முற்றுகை நிகழ்த்தினர்.

இதனால் ஈ பி. ஆர். எல். எவ். இயக்க உறுப்பினர்கள் நிலை குலைந்ததாகத் தெரியவருகிறது.

நேற்றுக் காலையில் அனேகமான பகுதிகளில் ஈ. பி. ஆர். எல் எவ். முகாம்கள் அனைத்தும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் முற்ருகக் கொண்டு வரப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

### ஆயுதங்கள் வாகனங்கள்

பல முகாம்களிலிருந்து பெருந் தொகையான நவீனரக ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

மோட்டோர் ஆயுதங்கள், நூற்றுக் கணக்கான ஷெல் குண்டுகள், ஏ. கே. ரைபிள்கள், ரவைகள், துப்பாக்கிகள் என்பன புலிகளின் கைகளுக்கு மாறியதாக அறிவிக்கப்பட்டது.

ஈ. பி. ஆர் எல். எவ். உறுப்பினர்களினுல் உபயோகிக்கப்பட்ட பல வாகனங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

ஈ. பி. ஆர். எல். எவ் முகாம்கள் மீது திடீர் முற்றுகை நிகழ்த்திய புலிகள் அங்கிருந்த பல பொருள்களைக் கைப்பற்றினர்.

பல இடங்களில் ஈ.பி. ஆர். எல் எவ்வின் தஸ்தாவேஜுக்கள், ஈழம் தபால் தலைகள், டெலிவிஷன் லைசென்ஸ் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் போன்றவை ஒன்ருக வீதியில் போட்டு குவிக்கப்பட்டு தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.

### கைது

பல நூற்றுக்கணக்கான ஈ. பி. ஆர். எல். எவ். உறுப்பினர்கள் புலிகளினுல் கைது செய்யப்பட்டிருப்பதாகவும்—

பல இடங்களில் ஈ பி. ஆர்.எல் எவ் உறுப்பினர்கள் எதிர்ப்பு ஏதும் காட்டாமல் புலிகளிடம் தாமாகவே சரணடைந்து வருவதாகவும் – தெரியவருகிறது. (அ-உ-10)

## ஒளித்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆர். எல் எவ். உறுப்பினர்களையும், அவர்களது ஆயுதங்களையும் தம்மிடம் ஒப்படைக்கும்படியும் புலிகள் வேண்டியுள்ளனர்.

கிழக்கின் சில பகுதிகளில் ஈ பி ஆர் எல். எவ். போராளிகள் சரணடைய மறுத்து வருவதாகவும்—

அங்கு சிறிய அளவில் தொடர்ந்து மோதல் நிகழ்ந்து வருவதாகவும் அறியப்படுகிறது.

வெல்லாவெளியில் ஈ. பி. ஆர். எல். எவ். உறுப்பினர் நால்வரும், திருக்கோவிலில் மூவரும் உயிரிழந்தனர். (அ-உ-10-21)

## மட்டுநகரில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் படகுகளுடன் அப்பகுதியிலிருந்து விலகிச் செல்ல முயன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அச்சமயம் படையினர் நடத்திய இத்துப்பாக்கி பிரயோகத்தில் இவ் வயோதிபர் உயிரிழந்தார்.

சுமார் 250 பேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக கல்லடி முகாம் கொண்டு செல்லப்பட்டனர். (உ-எ-21)

## மக்கள் வங்கியின் முன் மீண்டும் மறியற்போர்

யாழ்ப்பாணம், டிச. 15
மக்கள் வங்கியில் அடகு வைக்கப்பட்ட நகைகள் அனைத்தையும் மீள அளிப்பதற்கான உறுதியான நடவடிக்கைகளை வங்கி நிர்வாகம் எடுக்கும் வரை வட பகுதியிலுள்ள மக்கள் வங்கி கிளைகள் அனைத்திற்கும் முன்பாக மறியல் போராட்டம் நடைபெறும்.

எதிர்வரும் 18ஆம் திகதி (வியாழக்கிழமை) முதல் இந்தப் போராட்டம் மீண்டும் நடைபெறும் என அடகு வைத்தோர் சங்கம் அறிவித்திருக்கிறது.

அடகு வைத்தோர் சங்கத்தின் பொதுக்கூட்டம் ஒன்று கடந்த சனியன்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் புதிய பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்பட்டு பொறுப்புகள் அனைத்தும் பழைய உறுப்பினர்களால் கையளிக்கப்பட்டன.

இதன் பின்னர் புதிய செயற்குழுவின் கூட்டம் ஒன்று நேற்று நடைபெற்றது அக் கூட்டத்திலேயே மறியல் போராட்டம் குறித்து முடிவு எடுக்கப்பட்டது.

அனைத்து வாடிக்கையாளர்களும், அந்தந்த மக்கள் வங்கிக் கிளைகள் முன்பாக, வியாழன் காலை 7 மணிக்கு கூடுமாறும் அடகு வைத்தோர் சங்கம் கேட்டிருக்கிறது. (உ-10)

## ஆரம்பத்திலிருந்து புதிதாக இனப்பிரச்சினையை அணுக வேண்டும்

### இந்தியச் செய்தியாளர்களுக்கு சிறிமா பேட்டி

கொழும்பு, டிச. 15
இனப்பிரச்சினையை ஆரம்பத்திலிருந்து புதிதாக அணுகவேண்டும். அப்போதுதான் தீர்வு காணமுடியும்,

இந்தியச் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இப்படிக் கூறினுர்.

இந்தியச் செய்தியாளர்களை திருமதி பண்டாரநாயக்கா கடந்த சனிக்கிழமை மாலை சந்தித்து பேட்டியளித்தார்.

அச்சமயம் அவர் சொன்னதாவது:

பேச்சுக்கள் என்ற பெயரில் இன்றைய அரசு பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாத நிலையை ஏற்படுத்திவிட்டது,

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண சுதந்திரக் கட்சியும் மாற்று யோசனை ஒன்றைத் தயாரித்துள்ளது.

எமது மாற்றுயோசனை தமிழரின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும். கூடுதல் சுயாட்சியை தமிழருக்கு அது கொடுக்கும்

எமது யோசனைகள் நாட்டைப் பிரிக்காது. அரசின் யோசனைகள் நாட்டைப் பிரிக்கக் கூடியதாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

ஐ தே, க. அரசு 1977 தேர்தலுக்கு முன்னர் தமிழருக்கு பல உறுதி மொழிகளைக்கொடுத்தது பதவிக்கு வந்த பின்னர் அந்த உறுதிமொழிகளை நிறைவேற்ற அரசு தவறிவிட்டது.

இதனுல் தமிழ் இளைஞர்கள் விரக்தி அடைந்தனர்.

1977இல் பதவிக்கு வந்தவுடன் அரசு தமிழருக்கு வழங்கிய உறுதி மொழிகளை நிறைவேற்றியிருந்தால் நாமும் ஆதரவு வழங்கியிருப்போம்

இனி நாம் அதற்கு ஆதரவு வழங்கமுடியாது

இப்படி திருமதி பண்டாரநாயக்காசொன்னுர் (உ-எ)

## அலுவலகங்களில் பணிபுரியும் 10,000 அதிகாரிகளுக்கு இராணுவப் பயிற்சி

கொழும்பு, டிச. 15
அரச. தனியார் அலுவலகங்களில் பணிபுரியும் சுமார் பத்தாயிரம் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு இராணுவப் பயிற்சி அளிக்க அரசு தீர்மானித்துள்ளது.

இப்பாதுகாப்பு அதிகாரிகள் சரியான பயிற்சி பெற்றிருக்கவில்லை என்று தனியார் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் அண்மையில் கண்டுபிடித்தனர்.

அதைத் தொடர்ந்தே இராணுவப்பயிற்சிவழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (உ-ஐ-எ)

## தென்னிலங்கையில் மாணவர்களுடன் ஜே. வி. பி.க்குத் தொடர்பு

கொழும்பு, டிச. 15
தென் இலங்கை கல்லூரி மாணவர்களுடன் ஜே. வி. பி இயக்கத்தினர் நெருக்கிய தொடர்பு வைத்திருக்கின்றனர்.

இது குறித்து தீவிர கவனஞ் செலுத்தும்படி கல்வி அமைச்சு, பாதுகாப்பு அமைச்சைக் கோரியிருப்பதாகத் தெரிய வருகின்றது.

கொழும்பு மாநகரில் உள்ள கல்லூரி ஒன்றின் மாணவர்களுடன் ஜே. வி. பி. இயக்கம் நெருங்கிய தொடர்பு வைத்திருந்ததை பாதுகாப்பு அதிகாரிகள் அண்மையில் கண்டுபிடித்தனர்.

அதைத் தொடர்ந்து தான் பாதுகாப்பு அமைச்சுக்குக் கல்வி அமைச்சு முன்கண்ட வேண்டுகோளை விடுத்துள்ளது. (உ-ஐ-எ)

## இணை அமைச்சர்-

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சர் குழு புதுடில்லி சென்று போராளிகளின் நிலை பற்றி பிரதமர் காந்திக்கு அறிவித்துவிட்டு கொழும்புக்கு வரும். (உ-எ)

## பௌர்ணமி விழா

யாழ்ப்பாணம், டிச.15
இணுவில்இளந்தொண்டர் சபையினுல் நடத்தப்படும் மாதாந்த பௌர்ணமிவிழா இன்று சபையின் பணிமனையில் நடைபெறும்.

இசைஞான திலகம் ஆர். இராதா கிருஷ்ணன் குழுவினரின் வயலின் சோலோ இன்றைய நிகழ்ச்சியில் இடம் பெறும். (உ)

## மீள்பரிசிலனை செய்க---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களையும் புறக்கணித்து எமது இலட்சியத்தையே மூழ்கடிக்கக்கூடிய தலையீட்டை இந்தியா செய்வதற்கு வழிவகுத்துள்ளது.

ஆகவினுல் தமிழீழ விடுதலைப்புலிகள் தங்கள் முடிவுகளை மீள்பரிசிலனை செய்வது அவசியமானதாகும்.

நமது கையின் நகத்தாலேயே நமது கண்களைக் குத்துவது போன்ற இந் நிகழ்ச்சியினை மக்கள் ஒன்றுதிரண்டு தடுக்க வேண்டுமென்பதும் இயக்கங்களின் போக்கை நெறிப்படுத்த வேண்டும் என்பதும் அவசியமானதாகும்.

அவ்வகையில் இயக்கங்கள் மோதிக்கொள்கிருர்களென விலகியிருந்து பார்க்கும் மனுேபாவத்தை விட்டுவிட்டு "இயக்கமோதலை தவிர்... கள்; ஈழப்போராட்டத்தைத் தொடருங்கள்" என்ற கோஷத்துடன் அனைத்து மக்களும் ஒன்றுதிரண்டு தற்போதைய சூழ்நிலையை மாற்றியமைக்க வேண்டுமென ஈழப்புரட்சி அமைப்பு வேண்டுகோள் விடுக்கின்றது. (உ)

## தமிழ் மாகாண---

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

போது வற்புறுத்தும்.

இதனிடையில் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மாகாணம் ஒன்றை உருவாக்கும்போது1981ஆம் ஆண்டின் சனத்தொகை விகிதாசாரத்தை அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்ற தமிழ்ப் போராளிகளின் நிலைப்பாட்டை இந்திய அரசு அதிகாரிகள் ஏற்றுள்ளனர்.

-இப்படி புதுடில்லிச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

1981ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தின் இன விகிதாசாரத் தொகை பின்வருமாறு அமைந்திருந்ததாக போராளிகள் இந்திய அரசுக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

தமிழர்: 55%
முஸ்லிம்: 40%
சிங்களவர்: 04%

1981இன் இனவிகிதாசாரம் வருமாறு;

தமிழர்: 43%
முஸ்லிம்: 34%
சிங்களவர்: 23%

(உ-ஐ-எ)

## பொதுத்தேர்தலை எதிர்பார்த்து எதிர்க்கட்சிகள் இணைந்து முன்னணி உருவாகும்?

கொழும்பு, டிச. 15
1987இல் பொதுத் தேர்தல் வரும் என்று எதிர்பார்த்து, எதிர்க் கட்சிகளெல்லாம் ஒன்று சேர்ந்து முன்னணி ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

இந்தமுயற்சியில் பிரபல தொழிற்சங்க அமைப்பு ஒன்று பின்னணியில் இருந்து இயங்குகின்றது.

இந்த முன்னணியில் சுதந்திரக்கட்சி,ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, நவசம சமாஜக்கட்சி ஆகியன அங்கம் வகிக்கவேண்டும் என்பதில் பெருமளவு முன்னேற்றம் காணப்பட்டுள்ளதாம்.

இம்மாத இறுதியில் நவசமசமாஜக் கட்சியின் 9ஆவது ஆண்டு மாநாடு நடைபெறவுள்ளது.

அந்த மாநாட்டில்கலந்து கொள்ள சகல எதிர்க் கட்சிகளுக்கும் இம்முறை அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

இது முன்னணிஅமைப்பதற்கான நல்ல சகுனம் என்று கொழும்பு எதிர்க் கட்சி வட்டாரங்கள் கூறின. (உ-ஐ-எ)

## ஓவியப் பயிற்சி இலவச வகுப்புகள்

### கலாசாரப் பேரவை நடத்தும்

யாழ்ப்பாணம், டிச 15
யாழ் மாவட்டக் கலாசாரப் பேரவை ஓவியப் பயிற்சி வகுப்பு ஒன்றை நடத்த உள்ளது.

இவ்வகுப்பில் சேர்ந்து ஓவியம் பயில விரும்புவோரிடமிருந்து கட்டணம் அறவிடப்படமாட்டாது.

இவ்வகுப்பில் சேர விரும்புவோர் இல. 111, 2ஆம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தில் உள்ள கலாநிலையத்தில் பெயரைப் பதிவுசெய்யும்படி மாவட்ட கலாசாரப் பேரவைத் தலைவரான யாழ் அரச அதிபர் திரு. வி. எம். பஞ்சலிங்கம் வேண்டுகோள் விடுத்திருக்கின்ருர்

இந்த ஓவியப் பயிற்சி வகுப்பு மிக விரைவில் ஆரம்பமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## ஆஸ்பத்திரியை பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம், டிச. 15
யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த தென் இலங்கையைச் சேர்ந்த கிறிஸ்தவ சங்கக் குழுவினர் நேற்று யாழ் ஆஸ்பத்திரிக்கும் விஜயம் செய்தனர்.

கோட்டைப் பக்கமாக இருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல் காரணமாக சேதமடைந்த ஆஸ்பத்திரிக் கட்டடங்களையும் இக் குழுவினர் பார்வையிட்டனர். இது சம்பந்தமாக கொழும்பில் சுகாதார அமைச்சுடன் தாம் தொடர்பு கொள்வதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (உ-10-5)

## திருவாசகம் முற்றோதல்

வட்டுக்கோட்டைடிச 15
வட்டுக்கோட்டை ஈழத்துச் சிதம்பரம்சிவன்கோவில் காரைநகர் மணிவாசகர் சபையினர்மாலையில் திருவாசகம் முற்றோதல் செய்து வருகின்றனர்.

சைவப்பெரியார்களும் அடியார்களும் இந்த நிகழ்ச்சியில் கலந்து பக்தி சிரத்தையுடன் ஈடுபட்டுள்ளனர். (உ-16)

## பிலிப்பீன்ஸ் தொழில் மந்திரி பதவி நீக்கம்

மணிலா டிச. 14
பிலிப்பீன்ஸ் நாட்டு தொழிலாளர் நல மந்திரி ஆகஸ்தோ சாஞ்சி பதவியிலிருந்து நீக்கப்பட்டு விட்டார்.

அந்த நாட்டுப் பத்திரிகைத்துறைச் செயலாளர் டியாரோபெரிக்ரோ மணிலாவில் இதனை அறிவித்தார்.

ஜனுதிபதி அக்கினே அந்த மந்திரியின் ராஜினமாவை ஏற்றுக்கொண்டுள்ளார்.

நிதித் துறையில் நாணயம் மிக்க நண்பன்

ஷப்ரு

நம்பிக்கையுடன் சேமிக்க
உங்கள் தோழனின் உதவியை நாடுங்கள்!

Your Friends in Finance

★ ஷப்ரு ★

யுனிக்கோ பினுன்ஸ் லிமிடெட்

SHABRA
UNICO FINANCE LIMITED

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 – ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்ட திகதி: 15 - 12 - 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 15 Second Lane, Power-House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka Under Number QJ 60/N 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org